பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடி மாசி ௴ 6 உ. திங்கட்கிழமை (18-02-1991) UTHAYAN - A Lively Tamil National Daily கதிர் 83


# கொண்டைச்சியில் 50 படையினர் பலி!

## ஆயுதங்களும் அள்ளப்பட்டன

யாழ்ப்பாணம், பெப்ரவரி 18

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது மன்னார் மாவட்டம் கொண்டைச்சிப் பகுதியில் நேற்றுக் காலை மிகப்பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஐம்பதிற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் அள்ளி எடுத்தனர்.

சிலாவத்துறை இராணுவ முகாமிலிருந்து கஜுவத்தை இராணுவ முகாமுக்கு கால் நடையாகச் சென்ற நூறுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் மீதே நேற்றுக் காலை 7.40 மணி முதல் 8 மணி வரை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையில் ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் அள்ளி எடுக்கப்பட்டன.

மீட்கப்பட்ட ஆயுத விவரங்களை விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் வெளியிட்டன.

அவற்றின் விவரம் வருமாறு:-

★ ஏ.கே.எல்.எம்.ஜி - 3

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டு. மணற்பிட்டியிலும் பெரும் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மணற்பிட்டி இராணுவ முகாம் மீது கடந்த வியாழன் அதிகாலை 2-30 மணிமுதல் சுமார் மூன்று மணி நேரம் பெரும் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் நடத்தினர்.

இந்தத் தாக்குதலினால் படையினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை.

இந்தத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் தயானி [ஆரையம்பதி], மூவேஷ் [சித்தாண்டி] ஆகிய இருவரும் வீரமரணம் அடைந்தனர். [உ]

## ஆனையிறவில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 18

நேற்றுக்காலை ஆனையிறவு முகாமிலிருந்து இயக்கச்சிப் பக்கமாக காவல் அரண் அமைப்பதற்காக முன்னேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## இராணுவத்தினருக்கு பிரேமா காலக்கெடு!

லண்டன், பெப். 18

விடுதலைப் புலிகளின் போராட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ காலக்கெடு வழங்கியிருக்கிறார்.

கொழும்பிலிருந்து பி. பி. ஸிக்கு அதன் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் அனுப்பியிருக்கும் செய்தியிலேயே அவர் இப்படிக் கூறியிருக்கிறார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கையில் இலங்கை ஆயுதப்படையினர் ஈடுபட்டுள்ளது குறித்து அவர் அனுப்பிய செய்திக் குறிப்பு நேற்று ஒலிபரப்பானது.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.-

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது ஓமந்தையில் 23 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்று வவுனியாவில் உள்ள அரசுக்கு ஆதரவான தமிழ்க்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



மாறி உவருக்கு அவையள் காலக்கெடு விதிச்சாலும் ஆச்சரியப்படத் தேவையில்லைக் அண்டியவளோ......

## அதிரடித் தாக்குதலில் ஐந்து புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 18

கொண்டைச்சியில் நேற்றுக்காலை இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட பெரும் அதிரடித் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஐவர் வீரமரணமடைந்தனர்.

மேஜர் ராதாரவி [சி. சிவபாலன் - முழங்காவில்], மேஜர் சூரி [என். நகுலேஸ்வரன் - கிளிநொச்சி], கப்டன் துரைமணி [ச. தவராஜா - செட்டிகுளம்], லெப்டினன்ட் ஏகாம்பரம் [எம். மகாலிங்கம் - முருங்கன்], ஞானமுத்து [ஜோன் பற்றிக் அந்தோனி - பள்ளிமுனை, மன்னார்] ஆகியோரே வீரமரணமடைந்தனர். [உ]

## காங்கிரஸின் மிரட்டலுக்கு பணிந்தார் சந்திரசேகர்!

புதுடில்லி, பெப். 18

அமெரிக்கப் போர் விமானங்களுக்கு இந்திய விமான நிலையங்களில் எரிபொருள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் சந்திரசேகர் நேற்று அறிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது இது பற்றித் தாம் தெரிவித்து விட்டதாகவும் பிரதமர் சந்திரசேகர் சொன்னார்.

அமெரிக்கப் போர் விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள் வழங்கும் பிரச்சினை குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சி எதிர்ப்புத் தெரிவித்து சந்திரசேகர் அரசை மிரட்டி இருந்து தெரிந்தே.

இது விடயமாக சந்திரசேகரும் ராஜீவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே புதிய தீர்மானம் அறிவிக்கப்பட்டது. [ஓ-எ]

## சிறீலங்கா படையினருக்கு 'கால்' வழங்க இந்தியா முடிவு

கொழும்பு, பெப். 18

வடக்கு — கிழக்கில் இடம்பெற்ற மோதல்களின் போது கால்களை இழந்த சிறீலங்காப் படையினருக்கு, செயற்கைக் கால்களை வழங்க இந்திய அரசு சம்மதித்துள்ளதாக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

சுமார் 400 படையினருக்கு ஜெய்ப்பூர் நிறுவனம் மூலம் இந்தக் கால்களை வழங்குவதற்கு முடிவாகி இருப்பதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் வி. என். சுக்லாவுடன் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகள் பேச்சுக்கள் நடத்தியிருந்ததாக அறிய வருகிறது.

அதேசமயம் இராணுவ நடவடிக்கைகளின்போது கால்களை இழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்குத் தேவையான செயற்கைக் கால்களை தயாரிப்பதற்குரிய பொருள்களை வடக்கு — கிழக்குக்கு அனுப்புவதற்குக் கூட்டுப்படைத் தலைமையகம் தடை விதித்திருப்பது தெரிந்ததே. [ஓ-3]

## பூஸா தடுப்பு முகாமில் 75 மலையக இளைஞர்கள்!

கொழும்பு, பெப். 18

கடந்த சில மாதங்களில் மலையகத்தில் கைது செய்யப்பட்ட சுமார் 75 தமிழ் இளைஞர்கள் பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

தீவிரவாதச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின் மீதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

''மேர்ஜ்'' மனித உரிமைகள் ஸ்தாபனம், அரசுடன் தொடர்பு கொண்டு இந்த இளைஞர்களின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாயிபாபாவின் அழகிய வர்ண ஸ்ரிக்கேர்ஸ் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 266/1, ஸ்ரான்லி வீதியில் உள்ள ஸ்ரீ சாயிறாம் புத்தகசாலையில் தொடர்பு கொள்ளவும். [விக்னா ரியூஷன் சென்ரர் அருகாமை]. [15783]

### WANTED

English Short - Hand Typing Teaher call Personaaly 9 - 00 a.m. To 11 - 00 a.m. Fudo Enterprises 39/17, Power House Road, 3rd. Lane. Jaffna. [Near Jaffna Bus Stand) [சி-5778]

### ரைப்பிங் வகுப்புகள்

தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகின்றன. மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். FUDO:- 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். [சி-5745]

### லிகிதர் பரீட்சை

யாழ். பல்கலைக்கழக லிகிதர் பரீட்சைக்குரிய பொது உளச்சார்புநூல்[I.Q] எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. விலை 50/- ஆக்கியோன் க. குணராசா [M.A] [15852]

### போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோணியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளின் கட் 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [14608]

### திருமணம்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. ஆனால் இத்திருமணங்களை நிறைவேற்ற விடாமுயற்சி தேவை. உங்களுக்கு தேவையான மணமகன், மணமகளை தேடி அலையாது நாட வேண்டிய இடம்: திருவிளங்கம் புதிய மாங்கல்யா மரிஜ் சேவிஸ், 16/16, வளம்புரம் கொழும்புத்துறை. [15871]

### மணமகள் தேவை

முன்பு திருமணமான ஐம்பது வயதிற்கு மேற்பட்ட நல்ல அரச பதவியில் உள்ள சைவசமய ஆண்மகன் தகுந்த துணையை நாடுகிறார். சகல விபரத்துடன் பொறுப்பற்ற முன் திருமணமானவர்களும் விண்ணப்பிக்கலாம். C/O: இல: 179, உதயன், யாழ்ப்பாணம். [15865]

### கண்டெடுக்கப்பட்டது

புத்தூர் - வல்லை பிரதான வீதியில் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பணத்தைத் தொலைத்தவர் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். ச. உருத்திரமூர்த்தி, சிவசக்தி கோவிலடி., கோணேஸ்வீதி, அச்சுவேலி. [15868]

### MAKE-UP CLASSES

Basic Make up and Hair-Dressing Classes மிக விரைவில் ஆரம்பமாக உள்ளது. வெளிநாடு செல்லும் பெண்களுக்கும், பயன் பெறக்கூடிய வகையில் மிகவும் குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்: Yogi Beauty Parlour, 71, Nayanmar Veethy, [off Kachcheri Nallur Road] Nallur, Jaffna [15855]

### சேவை

நல்ல தரமான நியாய விலையில் மதிய உணவுப் பார்சல் மற்றும் சிற்றுண்டி வகைகள் இலங்கை கனடியன் அபிவிருத்தி நிதி உதவியுடன் உணவு வழங்கும் சேவைத் திட்டத்தின் கீழ் வழங்குகிறோம். தேவையானவர்கள் முன் அறிவித்தல் கொடுத்து சிற்றுண்டிச் சாலையில் பெற்றுக்கொள்ளலாம். சைவவித்தியாவிருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி/5774]

### குடும்ப ஆலோசனை

இலவசம் - இரகசியம், பெற்றோர்-பிள்ளைகள், கணவன்-மனைவி உறவு முறிவுகள், ஓய்வூதியம், சமூகசேவைகள் நிவாரணம் கொடுப்பனவுகள் செயற்கை உடல் உறுப்புகள், வெளிநாட்டில் வசிக்கும் உறவினர் தொடர்பான வேறும் விடயங்களுக்கு ஆலோசனைகள் இலவசம்-இரகசியம் பாதுகாக்கப்படும். P. S. திருச்செல்வம் இளைப்பாறிய நீதிமன்ற ஆலோசகர் 52, செம்மணி வீதி நல்லூர். [15442]

### தவறிவிட்டது

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த வைத்திலிங்கம் கிருபாகரன் என்பவருடைய அடையாள அட்டை இல: 57133342V உம், யாழ். மேல்நீதிமன்ற அடையாள அட்டையும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும், குளப்பிட்டிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் பணிமனையில் [illegible] வும். [illegible]

## சுவாமி மகா சமாதி

கொழும்பு, பெப். 18

திருகோணமலை சிவயோக சமாஜ ஆச்சிரம தாபகர் ஸ்ரீமத் கெங்காதரானந்தஜி கடந்த சனிக்கிழமை பகல் 11 மணியளவில் சென்னையில் மகா சமாதி நிலையடைந்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவரது பூதவுடல் கொழும்புக்கு அன்றைய தினமே கொண்டுவரப்பட்டு, பம்பலப்பிட்டியில் நேற்றிரவு 10 மணி முதல் அஞ்சலிக்கு வைக்கப் பட்டது.

பின்னர் பூதவுடல் திருகோணமலை சிவயோகசமாஜ ஆச்சிரமத்திற்கு நேற்றுக் காலைஎடுத்துச்செல்லப்பட்டு நேற்று மாலையே தகனம் செய்யப்படுவதாக இருந்தது.

## உள்ளூர் வெண்கட்டி

யாழ்ப்பாணம், பெப். 18

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவினர் உற்பத்தி செய்த வெண்கட்டிகளின் ஆரம்ப விற்பனை விழா இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு மேற்படி வித்தியாலயத்தில் நடைபெறும்.

உள்ளூர் மூலப் பொருள்களைப் பெருமளவு பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ள இந்த வெண்கட்டிகளை யாழ். கல்வித் திணைக்களம் கொள்வனவு செய்து பாடசாலைகளுக்கு விநியோகம் செய்ய உள்ளது.

2 ஆயிரத்து 500 வெண்கட்டிப் பெட்டிகளை விநியோகம் செய்வது மூலம் முறைசாராக் கல்விப் பிரிவினர் 75 ஆயிரம் ரூபாவைப் பெற உள்ளனர்.

கோட்டக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா, தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம், கொத்தணி அதிபர் திருமதி எஸ். மகாலிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. த. ஜீவரத்தினம் உட்பட பலர் விழாவில் கலந்து கொள்கின்றனர். [இ-15]

## தனித்துப்போட்டி

பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி தமிழக சட்டசபைத் தேர்தலில் குறைந்தது 130 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடும் என்று அக்கட்சியின் தமிழகக் கிளைத் தலைவர் பொன் விஜயராகவன் தெரிவித்தார். [உ-எ]

## ஊரடங்கு!

கொழும்பு, பெப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நேற்றுமாலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக பாது[illegible] அறி[illegible]

## ஆனந்தா கலண்டர்-1991

ஆங்கில தமிழ் திகதிகள், அமாவாசை, பூரணை, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, பிரதோஷம், கார்த்திகை, மற்றும் அரசாங்க வங்கி விடுமுறை விவரங்கள் அடங்கியது. இப்போது விற்பனையாகிறது. விலை ரூபா 22/- விற்பனையாளருக்கு கழிவுண்டு.

ஆனந்தா புத்தகசாலை,
226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[15859]

### யா / வைத்தீஸ்வர வித்தியாலயம்

## மாணவர் அனுமதி - 1991

ஆண்டு 6, 7, 8, க.பொ.த.ப. [உ.த] கலை, வர்த்தகம் - வகுப்புக்களில் மட்டும் சில வெற்றிடங்கள் உண்டு.

22 - 02 - 1991 வரை விண்ணப்பங்கள் நேரில் ஏற்றுக் கொள்ளப்படும்.

28 - 02 - 1991 இன் பின்னர் எவரும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்.

அதிபர்.

யா / வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
[சி-5776]

## தேவை

### அலுவலக உதவியாளர் (ஆண்)

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்திற்கு அலுவலக உதவியாளர் தேவை. [ஆண்]

க.பொ.த. [சா/த] இல் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவராகவும், சாவகச்சேரி நகரப் பகுதியில் வசிப்பவராகவும் இருத்தல்வேண்டும்.

**விண்ணப்பங்கள் யாவும் 22 - 2 - 91 ற்கு** முன்னர் தலைவர், கைத்தொழில் வர்த்தகர் சங்கம், தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கைத்தொழில் வர்த்தகர் சங்கம்,
[15867] சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா தம்பிராசா

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த திருமதி இராசம்மா தம்பிராசா காலமானார்.

இவர் தம்பிராசாவின் [மலாயன் பென்சனியர்] அன்பு மனைவியும், பூமணி, தவமணி, சிவசுப்பிரமணியம் [ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், கயிலைநாதன் J.P [இளைப்பாறிய பொறியியல் உத்தியோகத்தர்], சிவன்பாலன் [இளைப்பாறிய உரும்பிராய் கொத்தணி அதிபர்], ராதா ஆகியோரின் அன்பு மாமியாரும், உமைபாலன் [அரசாங்க அச்சகம், கொழும்பு], டாக்டர் சிவராஜினி இராசநாயகம் [யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை], சிவசொரூபி சத்தியபாலன் [விரிவுரையாளர், யாழ்ப்பாண பல்கலைக் கழகம்], சிவன்சுதன் [மருத்துவ பீட மாணவன்], சிவதவாணி, யாழினி [உடுவில் மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பேத்தியும், றேணுகா, மாதங்கி, சுபாங்கி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் 16-02-1991 சனிக்கிழமை நடைபெற்றன.

சிவாலயம்,
உரும்பிராய். [15448]

தகவல்:
செ. சிவன்பாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## உணர்வது எப்போது?

இலங்கை அரசாங்கம் கேட்கும் கடன் உதவியை வழங்குவதற்கு, சர்வதேச நாணய சபை வழமைபோல பல நிபந்தனைகளை விதித்திருக்கிறது. இலவசக் கல்வித்திட்டத்தை ரத்துச்செய்துவிடவேண்டும் என்பதும் அதில் ஒன்றாகும்.

இலங்கை கடந்த வருடம் சர்வதேச நாணய சபையிடம் இருந்து சுமார் 20 கோடி டொலர்களைக் கடனாகப் பெற்றது. ஆனால் இவ்வருடம் 45 கோடி டொலர்களைக் கேட்டுள்ளது.

அரச திணைக்களங்களில் ஆட்குறைப்பு, உணவு, எரிபொருள் மற்றும் போக்குவரத்து வசதிகளுக்குரிய மான்யங்களை நீக்குதல் ஆகிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டே அரசாங்கம் கடந்த வருடத்தில் கடனை வாங்கியது. அதற்கேற்ப அரச திணைக்களங்களில் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வுபெறும் புதிய நடைமுறையைக் கையாண்டு ஆட்குறைப்புச் செய்தது. போக்குவரத்து எரிபொருள் மான்யங்கள் முற்றாக நீக்கப்படாவிட்டாலும் பெருமளவு குறைக்கப்பட்டன. உணவு மான்யத்தில் கைவைத்தால் மக்கள் புரட்சி வெடிக்கும் என்ற அச்சத்தில் இன்னும் அதனைத் தொடவில்லை.

இம் முறை கடன் பெறுவதானால், முன்னர் பூரணமாக நிறைவேற்றப்படாத நிபந்தனைகளுடன், இலவசக் கல்வியை நீக்குதல் போன்ற கடுமையான மேலதிக நிபந்தனைகளையும் ஏற்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உருவாகி உள்ளது. இது பெரும் விபரீதமானது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட நிலையாகும்.

உலகவங்கி, சர்வதேச நாணய சபை, இலங்கைக்கு உதவும் நாடுகள் குழு ஆகிய நிதி வழங்கும் நிறுவனங்கள், அமைப்புகளிடமும் மற்றும் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான் போன்ற நாடுகளிடம் தனிப்பட்ட முறையிலும் இலங்கை இடைவெளி இல்லாது மாதாந்தம் கடனை வாங்கிக் கொண்டே இருக்கிறது.

1977-ஆம் ஆண்டில் 496 கோடி ரூபாவாக இருந்த கடன் 1991இல் 44,000 கோடி ரூபாவாக உயர்ந்துள்ளது! அப்பாடா! வேறு எந்த நாடாவது இப்படிக் கடனிலேயே ''வாழ்க்கை'' நடத்திக் கொண்டிருக்குமா என்பது சந்தேகமே!

அதாவது கடன் இல்லாமல் இயங்க முடியாது என்ற நிலையில், இலங்கையின் பொருளாதாரம் மிகவும் வெட்கத்துக்குரிய, சீரழிந்த கட்டத்தில் உள்ளது.

இந்த ஊசலாடும் நிலையிலும், தமிழருக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டு, அவற்றுக்காக கோடிக்கணக்கான பணத்தை அரசாங்கம் செலவு செய்கிறது. கடன் வாங்கி யுத்தம் நடத்துகிறது.

இதனைத் தென்னிலங்கை மக்கள் உணர்வதாக இல்லை. கடன் கொடுக்கும் நிறுவனங்களும் காட்டிக்கொள்வதாக இல்லை. கடன் வழங்குவதானால் தமிழருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை நிறுத்த வேண்டும் என்று நிபந்தனை விதிக்க அவற்றுக்கு 'மனம்' வரவில்லை; 'மனம்' வராது. கடனுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் ஒன்றில் தமக்கு ஏதாவது வர்த்தக நலன்களைத் தருபவையாக அமைய வேண்டும் அல்லது அரசியல் நலன்களை மறைமுகமாக விளைவிப்பவையாக இருக்க வேண்டும் என்பதிலேயே அவற்றின் கவனம் எல்லாம்!

ஏற்கனவே, வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 70 சதவீத மக்களைக் கொண்ட நாட்டில், உணவு மான்யத்தை நிறுத்தினால் மக்கள் பஞ்சம், பட்டினியால் மடிவார்கள். இலவசக் கல்வியை நிறுத்தினால் படிப்பறிவில்லாத எதிர்காலச் சமுதாயம் உருவாகும்.

தமக்கு நிகழவுள்ள இந்தப் பேராபத்துக்களை சிங்கள மக்கள் உணராமல் இருட்டில் இருக்கிறார்கள். தமிழர்களின் உரிமைகளைக் கொடுத்து நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதாக இல்லை. தமது வாழ்க்கை சுருங்கி வருகிறது என்ற ஆபத்தான உண்மையை அவர்கள் எப்போது உணருவார்களோ!

## ஸ்டாலினின் பேரன் சதாம்?

மாஸ்கோ, பெப். 18

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினின் பேரனாம்!

சோவியத் சஞ்சிகை சொபசெட்னிக் [Sobesednik] இந்தப் புதிய தகவலை வெளியிட்டுள்ளது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஸ்டாலினின் மகன் ஜேக்கப் நாஸிகளால் சிறை பிடிக்கப்பட்டார்.

சோவியத் படையினர் ஜேர்மன் இராணுவ ஜெனரலைக் கைது செய்த போது, அவருக்குப் பதிலாக ஸ்டாலினின் மகன் ஜேக்கப்பைப் பரிமாற்றம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் அத்தகைய கைதி பரிமாற்றத்துக்கு ஸ்டாலின் மறுத்து விட்டார். அதனால் ஜேக்கப் நாஸிகளின் பிடியில் இருந்தபோதே இறந்து விட்டார் எனக் கருதப்பட்டது.

ஆனால் நாஸிகளின் பிடியில் இருந்த ஜேக்கப்சாக வில்லை. நாஸிகளின் பிடியிலிருந்து தப்பி ஜேக்கப் மத்திய

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 18

கடந்த புதனன்று முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடன் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான முந்தன் என்பவர் வீரமரணமடைந்தார்.

# விடுதலைப் புலிகளை அடக்க இந்தியாவுக்கும் விருப்பம்

## தூதுவர் ஜா பேட்டி

கொழும்பு, பெப். 18

விடுதலைப் புலிகளை நீங்கள் அடக்க விரும்புவது போலவே நாங்களும் [இந்தியரும்] அடக்க விரும்புகிறோம்.

— இவ்வாறு கூறியிருக்கிறார் இலங்கைக்கான இந்தியத் தூதர் நாகேந்திரநாத் ஜா.

கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' பத்திரிகையின் நேற்றைய ஞாயிறு இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

அந்தப் பேட்டியின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

கேள்வி: பாக்கு நீரிணை ஊடாக தீவிரவாதிகளின் படகுப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் சுக்லாவின் கொழும்பு விஜயத்துக்குப் பின்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் குறுகிய — இந்த நீரிணையை — புலிகள் விரைவாகக் கடந்து தப்பிச் செல்வது ஸ்ரீலங்கா கடற்படைக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினையைத் தவிர்ப்பதற்கு இலங்கையும் இந்தியாவும் கூட்டாகக் கடல் ரோந்தில் ஈடுபடுவது சிறந்ததல்லவா?

பதில்: அருமையான யோசனை. ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று. எங்கள் தரப்பில் ஆட்சேபனை இல்லை. உங்களைப்போலவே நாங்களும் அவர்களை [புலிகளை] அடக்கவே [Bottle them] விரும்புகிறோம்.

கேள்வி: இரு நாடுகளும் புலனாய்வு மற்றும் தகவல்கள் ஆகியவற்றைப் பரிமாறிக் கொள்வது பற்றி...?

பதில்: ஏற்கனவே தூதரக

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஈழநாதம் முதலாம் ஆண்டு நிறைவு விழா நாளை

யாழ்ப்பாணம், பெப். 18

ஈழநாதம் பத்திரிகை முதலாவது ஆண்டு நிறைவு விழா நாளை 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

ஆய்வரங்கம், கலை நிகழ்ச்சி உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வரங்கம் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

அத்துடன் 'செய்தி வெளியிடும் பணியில் ஈழநாதம்', 'ஈழநாதம் எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள்', 'ஈழநாதம் வெளியிட்ட விவரணக் கட்டுரைகள்' ஆகிய தலைப்புகளில் முறையே பத்திரிகையாளர் திரு. மு. பொன்னம்பலம், விரிவுரையாளர் திரு. ஏ. ஜே. கனகரத்தினா, பேராசிரியர் திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

[இ]

## இராணுவத்தினருக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

குழு ஒன்று தெரிவித்தது.

வடபகுதியில் தற்போது அரசுப்படையினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் மேலும் தீவிரமடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்கு இன்னொரு சந்தர்ப்பம் தரும்படி இராணுவத் தளபதிகள் கோரினர். அதைத் தொடர்ந்து ஜனாதிபதி பிரேமதாஸா விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்தத்தை நீடிக்காமல் விட்டார்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதியிடம் இருந்தும்—

இராணுவ ரீதியில் திட்டவட்டமான முன்னேற்றத்தை சில மாதங்களுக்குள் காட்டும்படி இராணுவ தளபதிகளுக்கு கால்கெடு ஒன்றை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இதனால்தான் போர் நிறுத்த வாய்ப்பு முறிந்தது.

அதன் காரணமாக ஏற்கனவே பல துன்பங்கள் மத்தியில் வாழ்ந்து வரும் வடபகுதி மக்கள் மேலும் துன்பங்களை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு உள்ளது.

அரசின் பொருளாதாரத் தடை, பொது மக்களை மேலும் வருத்துவதாக விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அருகில் உள்ள மருத்துவ மனைகளுக்குக் கூட ஆபத்தான நிலையில் உள்ள நோயாளர்களை வாகனங்களில் ஏற்றிக் கொண்டுபோய் அனுமதிக்க முடியாத நிலை நிலவுகிறது.

ஒரு சில மருத்துவ மனைகள்தான் வட பகுதியில் தற்போது செயற்படுகின்றன.

எரிபொருள் பற்றாக்குறை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் வாகன நடமாட்டங்களைப் பாதித்துள்ளதாக ஆயுதப் படையினர் கருதுகின்றனர். தற்போதைய இராணுவ நடவடிக்கையில் தாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காண முடியும் என்று ஆயுதப் படையினர் நம்புவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைகிறது.

—இப்படி பி.பி.சி. நேற்று மாலை தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது.

[ந-எ]

## கொண்டைச்சி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

- ★ ரி.56-2 ரக துப்பாக்கி-3
- ★ ரி.81 ரக துப்பாக்கி-10
- ★ ரி.56-1 ரக துப்பாக்கி-1
- ★ ரி.56- ரக துப்பாக்கி-2
- ★ 203 பிஸ்டல் [டொங்கான்] - 1
- ★ 60 எம்.எம். மோட்டார்-1
- ★ அதற்குரிய ஷெல்-4
- ★ ரி.56 மகஸின்-84
- ★ ரி.81 மகஸின்-32
- ★ ரம் மகஸின்-3
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி. லிங்-407
- ★ ரவை - 9,000
- ★ 40 எம்.எம். மோட்டார் ஷெல் - 1
- ★ ஜே.ஆர். கிரனேற்-17
- ★ ரிமோட் கிரனேற்-1
- ★ ஏ.கே. ஹோல்ஸர்-17
- ★ தொலைத்தொடர்பு சாதனம் - 2
- ★ குண்டு துளைக்காத கவசம் - 4

[ந]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம. எண்ணை விலையில் தற்காலிக மாற்றம்

மண்எண்ணெயின் கட்டுப்பாட்டு விலையில் தற்காலிக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

புதிய மாற்றத்தின்படி மொத்த விலை ஒரு லீட்டர் 38 ரூபாவாகவும், சில்லறை விலை 40 ரூபாவாகவும் அமையும்.

கொழும்பில் மண் எண்ணெய் கொள்வனவில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் போக்குவரத்துச் சீரின்மை காரணமாகவே புதிய விலை நிர்ணயம் - தற்காலிகமாக - செய்யப்பட்டுள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

நிலைமை சீரானதும் முன்னைய கட்டுப்பாட்டு விலை மீளவும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

# அறுபது பெண்கள் உட்பட 200 தமிழர் கொழும்பில் கைது

கடந்த இரு தினங்களாக பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை பகுதிகளில் 60 பெண்கள் உட்பட 200 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானோர் அந்த அந்தப் பகுதி பொலீஸ்நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. [உ-3]

# தரைத் தாக்குதல் உடன் நடக்காது!

லண்டன், பெப்.18

ஈராக்குக்கு எதிரான தரைவழி யுத்தத்தை அடுத்த மூன்று தினங்களுக்கு நிறுத்தி வைப்பது என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதே வேளை— இராஜதந்திர முயற்சிகளின் முடிவுகளுக்காக—ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸுடன் சோவியத் ஜனாதிபதி கோர்ப்பச்சேவ் நடத்திவரும் பேச்சுக்கள் முடிவடையும் வரை—தரைவழி தாக்குதலை நிறுத்தி வைத்திருப்பதாக ஜனாதிபதி புஷ் அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் —

தரைவழி யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்பட்டு விட்டதாக பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சர் திரு.டுமா நேற்றுத் தெரிவித்தார். [ஓ-எ]

# தென்னாபிரிக்காவில் போராட்டம் நிறுத்தம்

ஜோஹனர்ஸ்பேர்க்.பெப். 17

தென்னாபிரிக்க அரசாங்கத்துக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கும் இடையில் ஏற்பட்ட சமரசம் ஒன்றைத் தொடர்ந்து அங்கு ஆயுதப் போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆ. தே. காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவுக்கும் பிரதமருக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் விளைவாகவே சமரசம் ஏற்பட்டது.

சகல தாக்குதல்களையும் நிறுத்துவது என்றும் சட்ட விரோத இயக்கங்கள் எதையும் இயங்க அனுமதிப்பதில்லை என்றும் ஆ. தே. காங்கிரஸ் அறிவித்துள்ளது. அதே வேளை அரசாங்கமும் பல கோரிக்கைகளை நிறைவேற்ற இணங்கியுள்ளது. [அ]

# சிங், கலைஞர் அரசுகளுக்கு புலிகளுடன் தொடர்பாம்!

புதுடில்லி, பெப். 18

வி. பி. சிங் அரசுக்கும் கருணாநிதி அரசுக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புகள் இருந்ததாக முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்று நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு. காந்தி இக் குற்றச்சாட்டை சுமத்தினார்.

புலனாய்வுப் பிரிவினால் திரு.வி.பி. சிங்குக்கோ அல்லது திரு. கருணாநிதிக்கோ தெரிவிக்கப்பட்ட சில முக்கிய தகவல்கள் சில மணி நேரங்களுக்குள் விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்தன என்றும் அவர் சொன்னார். [உ-எ]

## மிதிவெடி

கடந்த வெள்ளியன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாகாமம் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் வைத்திருந்த மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காலை இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## சந்திப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கச்சேரி மற்றும் சகல அரசாங்க, கூட்டுத்தாபன, திணைக்களங்களில் இருந்தும் சுயவிருப்பத்தின் பேரில் இளைப்பாறிய சகல உத்தியோகத்தர்களையும் நாளை மறுதினம் [புதன்] தம்மைச் சந்திக்குமாறு முல்லைத்தீவு அரச அதிபர் திரு.கே. பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

நல்லூர் சாதனா பாடசாலையில் நாளை மறுதினம் [புதன்] பிற்பகல் 2. 30 மணிக்கு சந்திக்கலாம் என்றும் —

முக்கிய விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாட இருப்பதாகவும் — அரச அதிபர் தெரிவித்துள்ளார். [ஒ]

## விடுதலை....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மட்டத்தில் உங்கள் அரசுடன் நாம் இந்த விடயத்தில் குறிப்பிட்ட அளவு செயற்பட்டு வருகிறோம்.

கடந்த டிசம்பரில் இந்தியாவுக்கு மேற்கேயிருந்து [இந்தியாவிலிருந்து அல்ல] புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல்கள் பற்றி நாம் தகவல் தெரிவித்திருக்கிறோம்.

இலங்கை - இந்திய கூட்டுக் குழு அமைக்கப்பட்டதும் இத்தகைய செயற்பாடுகளை ஸ்தாபனமயப்படுத்தமுடியும்.

திரு. ஜா பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

தற்சமயம் 700 முதல் 800 வரையான ஸ்ரீலங்கா படை அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

உபகரணங்கள் பற்றி எம்மிடம் கோரிக்கை ஏதும் விடப்படவில்லை. ஆனால் ஸ்ரீலங்கா பொலீஸாருக்கு மாருதி ஜீப்களை தந்துள்ளோம். டிரக்குகள் வந்து கொண்டிருக்கின்றன.

[பாதுகாப்பு விடயத்தில் இலங்கை - இந்திய கூட்டுச் செயற்பாடு, சீனாவிடமிருந்து இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்தல் போன்றவை குறித்தும் மற்றைய விடயங்கள் பற்றியும் திரு. ஜா தெரிவித்த கருத்துக்கள் பின்னர் வெளியாகும்.]

## ஸ்டாலினின்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிழக்குக்குச் சென்றார்.

ஈராக்கில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் வசித்து வந்த ஜேக்கப் அங்கு ஈராக்கிய பெண் ஒருவரை மணந்து ஆண் குழந்தை ஒன்றுக்கு தந்தையானார்.

அந்த ஆண் குழந்தையே இன்னமும் [illegible] தாம் [illegible] என்று அந்தக் கதை போகிறது!

# சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் வருகின்றனர்

கொழும்பு, பெப். 18

இலங்கை அரசுக்கு 50 கோடி அமெரிக்க டொலர் [சுமார் 2 ஆயிரம் கோடி ரூபா] நிதி ஒழுங்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி ஆராய்ந்து முடிவு எடுப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஏழு பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று அடுத்த திங்கட்கிழமை கொழும்புக்கு வரவிருக்கின்றது.

வளைகுடா போர் விளைவுகள், தேயிலை மற்றும் ஏற்றுமதிப் பொருள்களின் வீழ்ச்சி, உள்நாட்டுச் சண்டைகள் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கு இந்த தூதுக்குழுவின் விஜயம் நெருக்கடியைத் தவிர்க்கச் செய்வதாக இருக்குமா என்பது கேள்விக்குறியே.- இப்படி கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. [உ]

# நள்ளிரவில் குண்டு சத்தம்

யாழ்ப்பாணம், பெப். 18

பலாலி, காங்கேசன்துறைப் பக்கங்களில் இருந்து நேற்று இரவு பெரும் சத்தங்கள் கேட்டன.

குண்டுச்சத்தங்களும், பீரங்கி வேட்டுகளும் யாழ். நகரைக் கூட அதிரச் செய்தன.

நள்ளிரவு 11 மணி முதல் இச்சத்தங்கள் தொடர்ந்து கேட்டன. ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [ஒ]

## பூஸா தடுப்பு---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விவரங்களைச் சேகரித்துள்ளது.

''மோர்ஜ்'' ஸ்தாபனம் இந்த இளைஞர்களுக்கு உதவிகளைச் செய்து வருகிறது. மாதம் ஒருமுறை பூஸா சென்று இளைஞர்களின் நிலைமைகளையும் இந்த ஸ்தாபனம் அறிந்து வருகிறது. [ஒ-3]

# மரண அறிவித்தல்

## கந்தையா அழகரெத்தினம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அழகரெத்தினம் [ஓய்வுபெற்ற லிகிதர், மீன்பிடி இலாகா] காலமாகிவிட்டார்.

அன்னார் ஜெகநாயகியின் அன்புக் கணவரும், ஜெயராணி, டாக்டர் அழகராணி [R.M.O., யாழ். போதனா வைத்தியசாலை], அன்னராணி [ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி], செல்வராணி, ஸ்ரீஸ்கந்தராசா [இலங்கை வங்கி, கிளிநொச்சி], ஸ்ரீஜெயந்தி, ஜெகதீஸ்வரி [யாழ். பல்கலைக் கழகம்], ஸ்ரீகிருஷ்ணராசா [I.F.S., கண்டி] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு [ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகஸ்தர், கனிப்பொருள் கூட்டுஸ்தாபனம்], காலஞ்சென்ற நகுலசிங்கரெத்தினம் [இலங்கை வங்கி], சண்முகலிங்கம் [சென்றல் நேர்ஸிங் ஹோம், திருநெல்வேலி], சிவகுமாரன், சம்பந்தராணி [ஆசிரியை, மகாஜனா வித்தியாலயம், ஆவரங்கால்], சச்சிதானந்தபிள்ளை, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பொன்னையா, திருமதி அன்னம்மா ஹன்டி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாசுகி [லண்டன்], தயாபரன் [லண்டன்], ஜானகி [ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பேராதனை], பகீரதன், கௌரீதரன் [மொறட்டுவ பல்கலைக் கழகம்], கெங்காதரன், வைதேகி, பிரபாகரன் [பொறியியல் பீடம், பேராதனை பல்கலைக் கழகம்], நளாயினி [யாழ். மருத்துவ பீடம்], தாட்ஷாயினி, கஜானா, டிலோசன், சஞ்சயன், சாரங்கன், ஷர்மிலா, ஜனகன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஸ்ரீஸ்கந்தராசா
கருவேலடி லேன்,
கொக்குவில்.
[15449]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org